


# மனித நேயத்துடன் மருத்துவ சேவை டாக்டர் எம்.ஸ்ரீனிவாச ராவ்

டாக்டர் எம்.ஸ்ரீனிவாச ராவ் ஹைதராபாதில் இயங்கி வரும் "மல்லே சுப்பையா சாரிடபிள்" ட்ரஸ்டின் நிறுவனர்.

கடந்த 18 வருடங்களாக இலவசமாக நோயாளிகளுக்கு சிகிச்சை செய்துவரும் சேவை உள்ளம் கொண்ட பிரபல மருத்துவர். இதற்காக இதுவரை 40 லட்சம் ரூபாய்க்குமேல் ஆகியும் தொடர்ந்து இலவச மருத்துவ சேவை செய்து வருகிறார்.



இதற்கான தூண்டுதலாக இருந்தது எது? டாக்டர் ஸ்ரீனிவாச -ராவ் சொல்கிறார்:

"என் தாயாரின் விருப்பமும், முயற்சிகளும் ஆசீர்வாதமும் தான் இதற்கு அடிப்படை.

அரசாங்க வேலையில் இருந்த என் தந்தை, நான் முதலாண்டு மருத்துவம் படிக்கும்போது இறந்துவிட்டார். என் அம்மா அதிகம் படிக்காததால் அவருக்கு அட்டெண்டர் வேலை தான் கிடைத்தது. நான் படிப்பை விட்டு விட முடிவு செய்தபோது என்னை தொடர்ந்து என்னைப் படிக்க வைக்க அம்மாதான் முழு மூச்சுடன் பாடுபட்டார். அது மட்டுமல்ல என் அம்மாவின் கனவே நான் ஏழை எளியோருக்கு இலவச மருத்துவம் செய்ய வேண்டுமென்பதுதான். அதைத்தான் புனிதப் பணியாக செய்து வருகிறேன்."

2011ஆம் ஆண்டு அன்னையர் தினத்தன்று பிரபல நடிகர் டாக்டர் ஏ.நாகேஸ்வர ராவ் அவர்கள் முன்னிலையில் தன் அம்மாவுக்கு பாராட்டு விழா எடுத்து மனம் நிறைந்திருக்கிறார் இவர்.

மல்லே சுப்பையா சாரிடபிள் டிரஸ்ட் என்னும் தொண்டு நிறுவனத்தை நிறுவி, அதன் கீழ்" டாக்டர் எம்.எஸ்.ஆர். முதியோர் இல்லம்" ஒன்றும் நடத்தி வருகிறார்.

இந்த டிரஸ்டின் நோக்கம் மற்றும் பணிகள் என்ன என்று கேட்டேன்.

"ஆதரவற்ற முதியோருக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ சேவை, அளித்து மேலும் இல்லங்கள் அமைப்பது. அனாதை இல்லங்கள் அமைத்து, அனாதைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் தெருக் குழந்தைகளுக்கு புகலிடமும் கல்வியும் தருவது.





தகுதியுள்ளோருக்கு இலவச மருத்துவ சேவை செய்ய நல்ல மருத்துவமனைகள் அமைப்பது.

மானில, மத்திய அரசுகள் வழங்கும் நலத்திட்டப் பணிகளை சரியான முறையில் நிர்வகிப்பது. கிராமங்களிலும், பிற்பட்ட பகுதிகளிலும் ஏழை எளியோருக்கு நலப் பணிகள் செய்வது

புயல், வெள்ளம், தீ விபத்து போன்றவற்றால் பாதிக்கப்படுவோருக்கு தேவையான உதவிகள் செய்வது. மற்ற தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து நலப்பணிகளில் சமூக சேவைகளில் ஈடுபடுவது. போன்ற பல பணிகளை தொடர்ந்து இந்த டிரஸ்ட் செய்து வருகிறது" என்கிறார் டாக்டர். ஸ்ரீனிவாச ராவ்.

மனிதநேயத்துடன் கூடிய இவரது மருத்துவ சேவையைப் பாராட்டி பல அமைப்புகள் பல விருதுகளை இவருக்கு வழங்கி சிறப்பித்து உள்ளன.

நம் உரத்தசிந்தனை மாத இதழும் இவரது தன்னலமற்ற பணிகளைப் பாராட்டி 'சேவைச் சுடர்' விருது வழங்கி சிறப்பிக்கிறது.

நீங்களும் பாராட்டலாமே - 096522 20221

– சந்திப்பு : துளசி பட்

Best Compliments from



**SHYAMALA SHANKAR**

42- F3, Ram nivaz,
7th cross, 7th main,
malleswaram,
Bangalore - 560 003.
Mobile : **0 77609 23641**